# தமிழ் எழுத்துக்களும் ஒலியனடிப்படையிலான குறியீடுகளும்

S. Sathiyakala

Department of Languages, Eastern University, Sri Lanka

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் எழுத்துக்கள் ஒலியனியலை அடிப்படையாகக் கொண்டே அமையப்பெற்றுள்ளன. செயற்பாட்டு முக்கியத்துவமுடைய எழுத்துக்களை ஒலியன் என்பர். ஒரே சூழலில் அமைந்து பொருளை மாற்றக்கூடிய எழுத்துக்களை ஒலியன் என்பர். ஒரே சூழலில் அமைந்து பொருளை மாறுபடுத்தும் எழுத்துக்களை ஒரு எழுத்தின் மாற்றொலிகள் என்பர். (Allophone) ஒரு எழுத்தின் மாற்று வடிவங்கள் மாற்றொலியன். ஆங்கிலம், சிங்கள மொழிகளைப் போல தமிழ் மொழியிலும் உச்சரிப்பு ஓசைக்கு ஏற்ப வரிவடிவங்கள் காணப்படுகின்றன. இதனை ஒலியனியல் என்ற வகைப்பாட்டிற்குள் மொழியியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.
பேச்சொலியில் மாற்றொலியன்களை நாம் பயன்படுத்தினாலும் எழுத்துவழக்கில் அவ்வொலிகளுகளுக்கான ஒலியன்களை நாம் பயன்படுத்துவதில்லை. ஒரு எழுத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஒலிகளும், ஒரு ஒலிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்களையும் தமிழ் மொழி கொண்டுள்ளது. இக்குறையை நிவர்த்தி செய்யவே IPA கொண்டுவரப்பட்டது. உயிரொலிகளுக்கும் மெய்யொலிகளுக்குமென தனியான ஒலிகளையும் மாற்றொலியன்களையும் கருத்திற் கொண்டு ஒலியன்ளுக்கான குறியீடுகள் கொண்டுவரப்பட்டன. இவ்வாய்வு உயிரொலிகளையும் அவற்றுக்கான மாற்றொலிகளையும் குறியீடுகளையும் முழுதாக ஆராய்கின்றது. உயிரொலிகள் சந்தர்ப்பத்திற்கேற்ப வெவ்வேறு விதமாக ஒலிக்கின்றன. அதனையே இவ்வாய்வு எடுத்துரைக்கின்றது. ஒலியனியல் அடிப்படையில் எழுத்துக்களுக்கும் அவ்வெழுத்துக்களின் ஒலிகளுக்கு ஏற்பவும் தனித்தனியான குறியீடுகளை மொழியியலாளர்கள் வகுத்துள்ளனர். உயிரெழுத்துக்களுக்கு அமைத்துள்ள குறியீடுகளையே இவ்வாய்வு ஆராய்கின்றது.

**திறவுச்சொற்கள்** : எழுத்துக்கள், உயிரொலிகள், மெய்யொலிகள், ஒலியன், குறியீடுகள்.